# தமிழ்நாடு தகவல் ஆணையம்

**எண்.19, அரசு பண்ணை இல்லம், பேர்ன்பேட்டை,** (Pension Pay Office பின்புறம்),
**நந்தனம், சென்னை– 600 035.** தொலைபேசி எண். 044-29515590

**விசாரணை நாள் 10.07.2026**

**முன்னிலை**

**திரு அபய் குமார் சிங், இகாப (ஓய்வு)**
**மாநில தகவல் ஆணையர்**

*****

**வழக்கு எண் CP 138-E-2024**

திரு ஆர்.சுரேஷ் .. மேல்முறையீட்டாளர்

*/எதிர்/*

பொதுத் தகவல் அலுவலர்/ .. பொது அதிகார அமைப்பு
உதவி ஆணையர்,
நில நிர்வாக ஆணையரகம்,
சேப்பாக்கம்,
சென்னை - 600 005

******

**ஆணை**

இவ்வழக்கின் மீது இவ்வாணையத்தில் இன்று (10.07.2026) முற்பகலில் விசாரணை மேற்கொள்ளப்பட்டது

| | |
|---|---|
| மேல்முறையீட்டாளர் | திரு ஆர்.சுரேஷ் ஆஜராகவில்லை |
| தமிழ்நாடு தகவல் ஆணையம் (மேல்முறையீட்டு நடைமுறைகள்) விதிகள், 2012 விதி 7-ன்படி மனுதாரரின் வருகை கட்டாயமானதாகும். எனவே, அவரது வருகையின்மையை ஆணையம் பதிவு செய்கிறது | |
| பொது அதிகார அமைப்பின் சார்பாக | சென்னை சேப்பாக்கம், நில நிர்வாகத் துறையின் உதவி ஆணையர் திரு கு.ச.ராம்குமார் ஆஜரானார். |
| சட்டப்பிரிவு 6(1) மனு நாள் | 20.10.2023 |
| **கோரிய தகவல்**:- ஓ.மு.வறி 7(1)/629/2022 நாள் 03.10.2022 என்ற கடிதத்தின் மீது எடுக்கப்பட்ட நடவடிக்கை என்ன என்பது உட்பட 8 இனங்களில் தகவல் கோரியுள்ளார். | |
| பொதுத் தகவல் அலுவலர் பதில் கடிதம் | இணைக்கப்படவில்லை |

| | |
|---|---|
| சட்டப்பிரிவு 19(1)-ன் கீழ் முதல் மேல்முறையீட்டு மனு நாள் | 01.12.2023 |
| சட்டப்பிரிவு 19(3)-ன் கீழ் இரண்டாவது மேல்முறையீட்டு மனு நாள் | 06.01.2024 |

2) மனுதாரர் தகவல் அறியும் உரிமைச் சட்டம், 2005 பிரிவு 6(1)-ன் நில நிர்வாக ஆணையர் அலுவலக பொதுத் தகவல் அலுவலருக்கு அனுப்பிய மனுவுக்கு தனக்கு பதில் வழங்கப்படவில்லையென தெரிவித்து, சட்டப் பிரிவு 19(1)-ன் கீழ் முதலாம் மேல்முறையீட்டு மனுவையும். பின்னர் சட்டப்பிரிவு 19(3)-ன் கீழ் இரண்டாம் மேல்முறையீட்டு மனுவையும் அனுப்பியுள்ளதை தொடர்ந்து, இன்று இந்த இரண்டாவது மேல்முறையீட்டு மனுவின் மீது விசாரணை மேற்கொள்ளப்படுகிறது.

3) இன்றைய விசாரணைக்கு ஆஜரான பொதுத் தகவல் அலுவலர், மனுதாரர் கோரிய தகவல்கள் தொடர்பாக மனுதாரருக்கு 03.07.2026 அன்று பதில் கடிதம் அனுப்பப்பட்டுள்ளதாக தெரிவித்து, அதன் நகலை ஆணையத்தில் சமர்ப்பித்தார்.

4) வழங்கப்பட்ட ஆவணங்களை பரிசீலித்த ஆணையம் கீழ்க்கண்ட உத்தரவுகளை பிறப்பிக்கிறது:-

i. **மனுதாரர் 20.10.2023 நாளிட்டு அனுப்பியுள்ள 6(1) மனு தொடர்பாக மனுதாரருக்கு 03.07.2026 அன்றுதான் பதில் கடிதம் அனுப்பப்பட்டுள்ளது என்பதை ஆணையம் பதிவு செய்கிறது. ஆகவே, தகவல் அறியும் உரிமைச் சட்டம் குறித்துரைத்த காலத்திற்குள் மனுதாரருக்கு பதில் வழங்காத அப்போதைய பொதுத் தகவல் அலுவலர் / நில நிர்வாகத் துறை உதவி ஆணையர் யார் என்பதை மேல்முறையீட்டு அலுவலர் / நில நிர்வாகத் துறை கூடுதல் ஆணையர் கண்டறிந்து அவர் மீது தகவல் பெறும் உரிமைச் சட்டம், 2005 பிரிவு 20(1) மற்றும் 20(2) ஆகியவற்றின் கீழ் ஏன் நடவடிக்கை எடுக்கக் கூடாது என்பதற்கான எழுத்து மூலமான விளக்கத்தை பெற்று 20.08.2026 அன்று நில நிர்வாகத் துறை அலுவலக பொதுத் தகவல் அலுவலர் மூலம் இவ்வாணையத்தில் நேரில் சமர்ப்பிக்க வேண்டுமென ஆணையம் உத்தரவிடுகிறது.**

ii. **மனுதாரர் 18.10.2024 நாளிட்டு சட்டப்பிரிவு 19(1)-ன் கீழ் அனுப்பிய முதல் மேல்முறையீட்டு மனுவிற்கு குறித்துரைக்கப்பட்ட காலத்திற்குள் பதில் வழங்காத அப்போதைய மேல்முறையீட்டு அலுவலர் யார் என்பதை தற்போதைய மேல்முறையீட்டு அலுவலர் / நில நிர்வாகத் துறை கூடுதல் ஆணையர் கண்டறிந்து அவர் மீது தகவல் பெறும் உரிமைச் சட்டம், 2005 பிரிவு 20(1)-ன் கீழ் ஏன் நடவடிக்கை எடுக்கக் கூடாது என்பதற்கான எழுத்து மூலமான விளக்கத்தையும் பெற்று 20.08.2026 அன்று தற்போதைய நில நிர்வாக ஆணையரக பொதுத் தகவல் அலுவலர் மூலம்**

**இவ்வாணையத்தில் நேரில் சமர்ப்பிக்க வேண்டுமென ஆணையம் உத்தரவிடுகிறது.**

**ஒம்/- (அபய் குமார் சிங்)**
**மாநிலத் தகவல் ஆணையர்**

**//ஆணையத்தின் ஆணைப்படி//**

**உதவிப் பதிவாளர்**

**வழக்கு எண் CP 138-E-2024**

பெறுநர்

பொதுத் தகவல் அலுவலர்/
உதவி ஆணையர்,
நில நிர்வாக ஆணையரகம்,
சேப்பாக்கம்,
சென்னை - 600 005

கூடுதல் ஆணையர்,
நில நிர்வாக ஆணையரகம்,
சேப்பாக்கம்,
சென்னை - 600 005

திரு ஆர்.சுரேஷ்,
எண்.1/62, மேட்டுத் தெரு,
உடையார்பாளையம் வட்டம்,
கல்லாத்தூர் தண்டலை - 621803
அரியலூர் மாவட்டம்

Copy to file
CR/PA